**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி</u>**

**<u>முன்னிலை: திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,</u>**

**<u>நீதித்துறை நடுவர், பழனி</u>**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 9ம் நாள்**

**2026ம் வருடம் ஜூன் திங்கள் 23ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.650/2012</u>**

அரசுக்காக – காவல் சார்பு ஆய்வாளர்,
பழனி அடிவாரம் கா.நி.கு.எண்.123/2012 **... குற்றமுறையீட்டாளர்**

**/எதிர்/**

1. சந்தனகுமார், 24/2012
த.பெ.நாகராஜ்,
240, மருத்துவ நகர்,
அடிவாரம்,
பழனி.

2. பாண்டியன், 37/2012
த.பெ.ஜெயக்குமார்,
22, தெற்கு அண்ணா நகர்,
பழனி.

**3. கோபிநாத், 27/2012 (இறப்பு)**
த.பெ.சின்னத்தம்பி,
இட்டேரி ரோடு,
அடிவாரம், பழனி.

4. ராஜேஷ், 25/2012
த.பெ.ராஜன்,
மதனபுரம்,
அடிவாரம், பழனி. **... எதிரிகள்**

இவ்வழக்கு 21.12.2012ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக கற்றிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.தினேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

<u>**தீர்ப்புரை**</u>

<u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**</u> –

கடந்த 16.04.2012ம் தேதி 16.00 மணிக்கு பழனி அடிவாரம் பைபாஸ்ரோடு ஆவின் பால்பண்ணை பின்புறம் சென்று கொண்டிருந்த வாதியிடம் 1ம் எதிரி கத்தியைக்காட்டி மிரட்ட அவர் பயந்து கொண்டு பணத்தை எடுத்தபோது, 2 முதல் 4 எதிரிகள் அந்த பணத்தை பிடுங்கிக்கொண்டு ஓடிச்சென்றதாகவும், எனவே, 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 387ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது பழனி அடிவாரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார்கள், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 251(1) கு.வி.மு.ச.வின்படி, 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 387ன் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 251(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் 3ம் எதிரி வழக்கிடை காலத்தில் இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போனதாக உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் 1, 2, 4 எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

திருமதி.சாந்தி அடிவாரம் காவல்நிலையத்தில் கடந்த 16.04.2012ம் தேதி 21.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது முகமது கனி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து பழனி அடிவாரம் காவல்நிலைய கு.எண்.123/2012 பிரிவு 387 இ.த.ச பிரிவின் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் முகமது கனி, பாண்டி, செல்வராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் சந்தனகுமார், பாண்டியன், கோபிநாத், ராஜேஷ் ஆகியோர்களை 17.04.2012ம் தேதி 10.00 மணிக்கு பழனி அடிவாரம் Winch நிலையம் முன்பு கைது செய்து, பின்னர் 1வது எதிரி சந்தனகுமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சர்புதீன், சேக்முகமது ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் (ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3) பதிவு செய்தும், பின்னர் மேற்படி எதிரியிடம் அ.சா.ஆ.4 அத்தாட்சியில் பணம் ரூபாய் 300/- மற்றும் கத்தி, இருசக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி, மேலும் படிவம் 91 மூலம் 17.04.2012ம் தேதி கத்தி - 1, பணம் ரூபாய் 300/-, TN 67 H 0157 Yamaha Crux R ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, மேலும் TN 59 Q 8440 TVS Suzuki இருசக்கர வாகனத்தை 17.04.2012ம் தேதி கைப்பற்றி கத்தி - 1, பணம் ரூபாய் 300/-, TN 67 H 0157 Yamaha Crux R ஆகியவை அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ.5, TN 59 Q 8440 TVS Suzuki இருசக்கர வாகனம் அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ.6 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, (TN 67 H 0157 Yamaha Crux R மற்றும் TN 59 Q 8440 TVS Suzuki ஆகிய இருசக்கர வாகனங்கள் அடங்கிய புகைப்படம்(எண்ணிக்கை - 3) மற்றும் CD அ.சா.ஆ.7) பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவு 387 இ.த.சவின் கீழ் 21.04.2012ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்சாட்சி என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு முடிவுற்றது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1, 2, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 387ன் கீழ் உள்ள குற்றம் அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

1ம் எதிரி வாதியை கத்தியைக்காட்டி மிரட்ட அவர் பயந்து கொண்டு பணத்தை எடுத்தபோது, 2 முதல் 4 எதிரிகள் அந்த பணத்தை பிடுங்கிக்கொண்டு ஓடிச்சென்றதாக வைத்த குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரிகள் தரப்பில் பின்வருமாறு கூறினார்கள்</u> –

1ம் எதிரி வாதியை கத்தியைக்காட்டி மிரட்ட அவர் பயந்து கொண்டு பணத்தை எடுத்தபோது, 2 முதல் 4 எதிரிகள் அந்த பணத்தை பிடுங்கிக்கொண்டு ஓடிச்சென்றதாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டு பொய் என்றும், புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே,

எதிரிகளுக்கு எதிரானக் குற்றச்சாட்டு எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு –**

கடந்த 16.04.2012ம் தேதி 16.00 மணிக்கு பழனி அடிவாரம் பைபாஸ்ரோடு ஆவின் பால்பண்ணை பின்புறம் சென்று கொண்டிருந்த வாதியிடம் 1ம் எதிரி கத்தியைக்காட்டி மிரட்ட அவர் பயந்து கொண்டு பணத்தை எடுத்தபோது, 2 முதல் 4 எதிரிகள் அந்த பணத்தை பிடுங்கிக்கொண்டு ஓடிச்சென்றதாகவும், எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்வதாகவும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 16.04.2012ம் தேதி மாலை 04.00 மணியளவில் தான் பைபாஸ் அருகே ஐஸ் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது சந்தானம் என்பவர் தன்னிடம் ஐஸ் வாங்கியதற்கு தான் பணம் கேட்டேன் அதற்கு காசெல்லாம் தர முடியாது. நீ பண்றத பண்ணு என்றும் தகாத கெட்ட வார்த்தைகளால் தேவிடியா மகனே என்று திட்டியும் ஐஸ் வண்டியை கீழே தள்ளிவிட்டார்கள் அதில் ஐஸ் வண்டி சேதமாகிவிட்டதாகவும், பின்னர் சந்தானம், கோபி ராஜேஷ் பாண்டியன் என்பவர்கள் தன்னை துரத்தி தடியால் அடித்ததாகவும், எதிரி சந்தானம் தன்னை தடியால் அடித்ததில் தனக்கு முதுகில் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தடுத்ததால் எதிரிகள் தப்பிக்க முயற்சி செய்த போது சார்பு ஆய்வாளர் கவிதா அவர்கள் எதிரிகளை கைது செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 16.04.2012ம் வருடம் மாலை சுமார் 04.00, 05.00 மணியளவில் அ.சா.1 சம்பவயிடமான பால்பண்ணை அருகே ஐஸ்கிரீம் விற்று கொண்டிருந்ததாகவும், அங்கிருந்த சிறுவர்கள் அ.சா.1யிடம் ஐஸ் கிரீம் கேட்டபோது அவர் கூடுதலாக ஐந்து ரூபாய் சேர்த்து சொன்னபோது

ஐஸ் கிரீம் கேட்ட சிறுவர்களை அவர் தள்ளிவிட்டதாகவும், பின்னர் ஐஸ் கிரீம் கேட்ட சிறுவர்களின் பெற்றோர் அ.சா.1யிடம் சத்தம் போட்டபோது அ.சா.1ஐ தள்ளுமுள்ளில் கீழே தள்ளிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 16.04.2012ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் தானும், தனது வீட்டில் தனது மாமா இருந்தபோது தனது கடை தள்ளி அங்கு வந்த ஐஸ் வியாபாரியிடம் ஐஸ் கேட்டு ஆஜர் எதிரி மற்றும் மற்ற மூன்று எதிரிகள் சண்டையிட்டு கொண்டிருந்ததாகவும், எதிரிகள் ஐஸ் கொண்டு வந்தவரை கீழே தள்ளிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. இந்த வழக்கில் அ.சா.1ஐ நான்கு எதிரிகளும் சேர்ந்து ஐஸ் வாங்கிக்கொண்டு பணம் தர முடியாது என்று சொல்லி அடித்துள்ளார்கள் என்பது அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து மிகத்தெளிவாக தெரிகிறது. பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1ன் சாட்சியத்தில், எதிரிகள் தன்னிடமிருந்து பணத்தை பிடுங்கி சென்றார்கள் என்று எந்த சாட்சியமும் அளிக்கப்படவில்லை. அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் சாட்சியத்திலிருந்து பார்க்கும் போதும், அ.சா.1யிடமிருந்து எதிரிகள் பணத்தை பறித்து சென்றார்கள் என்பதற்கு எந்தவித சாட்சியமும் இல்லை. எனவே அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து எதிரிகள் அ.சா.1ஐ அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது மிகத் தெளிவாக தெரிகிறது.

15. மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை பொய்ப்பிக்கும் வகையில் எந்த பதில்களும் பெறப்படவில்லை. எனவே, இந்த வழக்கில் ஏற்கனவே விளக்கிக் கூறப்பட்ட இ.த.ச பிரிவு 387 கீழான குற்றம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், இ.த.ச பிரிவு 323 கீழான குற்றம் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இந்த வழக்கில் இறுதி அறிக்கையானது இ.த.ச பிரிவு 387ன் கீழ் தாக்கல் செய்துள்ளதால் இ.த.ச பிரிவு 387ன் கீழான குற்றம் தெளிவாக விளக்கி

கூறப்பட்டுள்ளது. அ.சா.1ன் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, இ.த.ச பிரிவு 323ன் குற்றத்திற்கான சங்கதிகள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல் இருப்பதால் இ.த.ச பிரிவு 323ஐ பொறுத்து தற்போது குற்றமானது விளக்கி கூறப்படவில்லை என்பது எதிரிகளின் எதிர்வாதத்திற்கு எந்தவித குந்தகமும் ஏற்படவில்லை என்றும், எதிரிகளின் எதிர்வாத உரிமைக்கு எந்தவித பாதகமும் ஏற்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 387ன் கீழான குற்றம் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், 1, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 387ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்றும், 1, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச 323ன் பிரிவின் கீழான குற்றம் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 1, 2, 4 எதிரிகள் இ.த.ச 323ன் பிரிவின் கீழ் குற்றவாளிகள் என்றும் இந்நீதிமன்றம் கண்டறிகிறது.

18. 1, 2, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 387ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்றும், அதனால் 1, 2, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 387ல் இருந்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்தும், 1, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச 323 பிரிவின் கீழான குற்றம் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 1, 2, 4 எதிரிகள் இ.த.ச 323 பிரிவின் கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்தும், கு.வி.மு.ச பிரிவு 255(2)ன் கீழ் இ.த.ச பிரிவு 323ன் கீழான குற்றத்திற்கு 1, 2, 4 எதிரிகளுக்கு தலா ரூ.1,000/- அபராதமும் கட்டத்தவறினால் தலா இரண்டு வார கால மெய்க்காவல் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**<u>19. வழக்கு சொத்து</u> : –**

i. இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்தான பணம் ரூ.300/– ஆனது அ.சா.1யிடமிருந்து பறிக்கப்பட்டது என்று அ.சா.1 எந்தவித சாட்சியமும் அளிக்காமல் இருக்கும் காரணத்தினாலும், எதிரிகள் இந்த தொகையை தங்களுடையது என்று எந்தவித எதிர்வாதமும் முன்வைக்காமல் இருக்கும் காரணத்தினாலும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் இந்த தொகை அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது.

ii. இந்த வழக்கில் எதிரிகள் ஐஸ் வாங்கிக்கொண்டு பணம் தரவில்லை என்று அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதாலும், இந்த வழக்கில் உள்ள குற்றச்செயலை செய்வதற்கு இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லாத காரணத்தினாலும் எதிரிகள் ஐஸ் வாங்குவதற்காக தான் அந்த இடத்திற்கு வாகனத்தில் வந்துள்ளார்கள் என்பது வழக்கின் சங்கதிகளிலிருந்து தெளிவாக தெரியும் காரணத்தினாலும், இந்த வாகனங்களை இந்த வழக்கில் அரசுடைமையாக்க தேவையில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்துக்களான [TN 67 H 0157 Yamaha Crux R மற்றும் TN 59 Q 8440 TVS Suzuki ஆகிய இருசக்கர வாகனங்கள் அடங்கிய புகைப்படம் (எண்ணிக்கை – 3) மற்றும் CD – அ.சா.ஆ.7] 1) TN 59 Q 8440 TVS SUZUKI வாகனம் இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.9913/2015, 09.12.2015ம் தேதியிட்ட உத்தரவின்படியும், 2) TN 69 H 0157 YAMAHA CRUX வாகனம் இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.4328/2012, 18.07.2011ம் தேதியிட்ட உத்தரவின்படியும், இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார்கள். மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் மேற்படி சொத்தின் உரிமையாளர்கள்

மேற்படி சொத்துக்களை நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

iii. இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்தான கத்தி மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூன் திங்கள் 23ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:23 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | முகமது கனி |
| அ.சா.2 | பாண்டி |
| அ.சா.3 | செல்வராஜ் |
| அ.சா.4 | பிரதாப் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனு | 16.04.2012 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | முதல் தகவல் அறிக்கை | 16.04.2012 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 17.04.2012 | அ.சா.ஆ.3 | அ.சா.6 | அசல் |
| 4 | அத்தாட்சி | 17.04.2012 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | கத்தி – 1, பணம் ரூபாய் 300/–, TN 67 H 0157 Yamaha Crux R ஆகியவை அடங்கிய படிவம் 91 | 17.04.2012 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6 | TN 59 Q 8440 TVS Suzuki இருசக்கர வாகனம் அடங்கிய படிவம் 91 | 16.04.2012 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |
| 7 | TN 67 H 0157 Yamaha Crux R மற்றும் TN 59 Q 8440 TVS Suzuki ஆகிய இருசக்கர வாகனங்கள் அடங்கிய புகைப்படம் (எண்ணிக்கை – 3) மற்றும் CD | 17.04.2012 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:29 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

<u>**குறிப்பு**</u> **:–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் காவலில் இருந்தார்கள்.
2. 1, 2, 4 எதிரிகளுக்கு தீர்ப்பு நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
3. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
4. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
5. சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் எழுதப்பட்டது.

Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Palani

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 23.06.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commence ment of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 16.04.2012 | 16.04.2012 | 17.04.2012 | 26.04.2012 | 27.05.2013 | 22.06.2026 | 23.06.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | 16.04.2012<br>21.04.2012<br>30.11.2012<br>21.12.2012 | Complainant side evidence till 18.06.2026 |

<u>Judgment in CC 650/2012 on the file of the Judicial Magistrate of Palani.</u>

Complainant: The Sub-Inspector of Police, Palani Adivaram P.S in Cr.No.123/2012

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Santhanakumar | 24/2012 | S/o.Nagaraj |
| Pandiyan | 37/2012 | S/o.Jeyakumar |
| **Gopinath (died)** | 27/2012 | S/o.Chinnathambi |
| Rajesh | 25/2012 | S/o.Rajan |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Adivaram | Palani |
| Hindu | -- | South Anna Nagar | Palani |
| Hindu | -- | Adivaram | Palani |
| Hindu | -- | Adivaram | Palani |

Offence : U/s. 387 IPC

Framing of Charges : A1, A2 and A4 are acquitted U/s.255(1) of Crpc from the offence U/s. 387 IPC and A1, A2 and A4 are convicted U/s.255(2) of Cr.P.C for the offence U/s.323 IPC and sentenced to pay a fine of Rs.1,000/- each in default simple imprisonment of two weeks each U/.s.323 IPC.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:35 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

Judicial Form No.61

(See Rule 106)

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, PALANI

JUDGMENT IN CC 650 OF 2012

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI

Complainant : Sub Inspector of Police, Palani Adivaram PS.

Accused : 1) Santhanakumar & 3 others

Offence : Section 387 IPC

**Finding** : A1, A2, A4 were found guilty.

**Sentence** : A1, A2 and A4 are acquitted U/s.255(1) of Crpc from the offence U/s. 387 IPC and A1, A2 and A4 are convicted U/s.255(2) of Cr.P.C for the offence U/s.323 IPC and sentenced to pay a fine of Rs.1,000/- each in default simple imprisonment of two weeks each U/.s.323 IPC.

**Property** :

i. இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்தான பணம் ரூ.300/- ஆனது அ.சா.1யிடமிருந்து பறிக்கப்பட்டது என்று அ.சா.1 எந்தவித சாட்சியமும் அளிக்காமல் இருக்கும் காரணத்தினாலும், எதிரிகள் இந்த தொகையை தங்களுடையது என்று எந்தவித எதிர்வாதமும் முன்வைக்காமல் இருக்கும் காரணத்தினாலும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் இந்த தொகை அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது.

ii. இந்த வழக்கில் எதிரிகள் ஐஸ் வாங்கிக்கொண்டு பணம் தரவில்லை என்று அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதாலும், இந்த வழக்கில் உள்ள குற்றச்செயலை செய்வதற்கு இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லாத காரணத்தினாலும் எதிரிகள் ஐஸ் வாங்குவதற்காக தான் அந்த இடத்திற்கு வாகனத்தில் வந்துள்ளார்கள் என்பது வழக்கின் சங்கதிகளிலிருந்து தெளிவாக தெரியும் காரணத்தினாலும், இந்த வாகனங்களை இந்த வழக்கில் அரசுடைமையாக்க தேவையில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்துக்களான [TN 67 H 0157 Yamaha Crux R மற்றும் TN 59 Q 8440 TVS Suzuki ஆகிய இருசக்கர வாகனங்கள் அடங்கிய புகைப்படம் (எண்ணிக்கை - 3) மற்றும் CD] 1) TN 59 Q 8440 TVS SUZUKI வாகனம் இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.9913/2015, 09.12.2015ம் தேதியிட்ட உத்தரவின்படியும், 2) TN 69 H 0157 YAMAHA CRUX வாகனம் இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.4328/2012, 18.07.2011ம் தேதியிட்ட உத்தரவின்படியும், இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார்கள். மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் மேற்படி சொத்தின் உரிமையாளர்கள் மேற்படி சொத்துக்களை நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

iii. இந்த வழக்கில், பி.ஆர்.எண்.172/2012ல் தாக்கலான வழக்குச் சொத்தான கத்தி மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

| Sl. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Santhanakumar | S/o.Nagaraj | -- | -- | Adivaram | Palani |
| 2 | Pandiyan | S/o.Jeyakumar | -- | -- | South Anna Nagar | Palani |
| 3 | **Gopinath (died)** | S/o.Chinnathambi | -- | -- | Adivaram | Palani |
| 4 | Rajesh | S/o.Rajan | -- | -- | Adivaram | Palani |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commencement of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 16.04.2012 | 16.04.2012 | 17.04.2012 | 26.04.2012 | 27.05.2013 | 22.06.2026 | 23.06.2026 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Complainant side evidence till 18.06.2026 |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:42 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**Case Summary in CC 650/2012**

| S. No | Description | Remarks |
|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused/Surrender | 17.04.2012 |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | 21.04.2012 |
| 3 | The date of Commital of the Case to the court of session | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | 27.05.2013 |
| 5 | Filling of Miscellaneous petition and result | Nil |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | Witness / Chief / Cross:<br>PW1 — 14.10.2024 — 14.10.2024<br>PW2 — 17.06.2026 — 17.06.2026<br>PW3 — 17.06.2026 — 17.06.2026<br>PW4 — 18.06.2026 — 18.06.2026 |
| 7 | NBW Issued date | NIL |
| 8 | NBW recalled | NIL |
| 9 | Questionings u/s 313(i)(b) of Cr.P.C. | 22.06.2026 |
| 10 | Details of Abscondence of an accused and his appearance/production | NIL |
| 11 | Grant of stay by superior courts and the results there of | NIL |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:47 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No. 650/2012**
**Date : 23.06.2026**

A3 died. (C.A). A1, A2 and A4 Present. Judgment pronounced in Open Court.

A1, A2 and A4 are acquitted U/s.255(1) of Crpc from the offence U/s. 387 IPC and A1, A2 and A4 are convicted U/s.255(2) of Cr.P.C for the offence U/s.323 IPC and sentenced to pay a fine of Rs.1,000/- each in default simple imprisonment of two weeks each U/.s.323 IPC.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.23 14:00:52 +0530

**Judicial Magistrate,**
**Palani.**